(ஆ) கன்னியாகுமரி மாவட்டம், கேரளாவிலிருந்து பிரிந்து வருவதற்கு 1956 ஆம் ஆண்டு போராட்டம் நடத்தியவர்களுக்கு தியாகி பென்ஷன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு.மா. சுந்தரதாஸ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு.மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் இல்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் இதோ இருக்கிறார். அமைச்சர் உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்.

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1956 ஆம் ஆண்டு கேரளாவிலிருந்து பிரிந்து வருவதற்குப் போராட்டம் நடத்தியவர்களுக்கும் தியாகிகள் அடிப்படையில் எல்லோருக்கும் பென்ஷன் வழங்கப்பட்டுள்ளதா? வழங்கப்படாவிட்டால் இன்னும் எவ்வளவு பேருக்கு பாக்கி உள்ளது? (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே இருப்பதை அப்படியே படியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பிறகு கேள்வி கேளுங்கள். அஜெண்டாவிலே இருப்பதை அப்படியே படிக்க வேண்டும். (குறுக்கீடு) அதிலே இருப்பதை அப்படியே படியுங்கள். அஜெண்டாவிலே இருப்பதைப் படியுங்கள். நீங்கள் பதிலிலே இருப்பதைப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

திரு. மா. சுந்தரதாஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கேரளாவிலிருந்து பிரிந்து வருவதற்கு 1956 ஆம் ஆண்டு போராட்டம் நடத்திய அனைவருக்கும் தியாகிகள் அடிப்படையில் பென்ஷன் வழங்க முடியுமா என்பதை ...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வழங்குவது குறித்து என்று சொல்லுங்கள்.

திரு. மா. சுந்தரதாஸ்: வழங்குவது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*** மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

தமிழ்மொழி, பண்பாடு மேம்பாட்டைப் பேணிக்காப்பதிலும், எல்லையைக் காப்பதிலும், ஈடுபாடு கொண்டு தொண்டாற்றியவர்களைச் சிறப்பிக்கும் வகையில் உதவித் தொகை அளிக்கும் திட்டத்தினை 1983 ஆம் ஆண்டு தமிழ் நாடு சட்டம் 23-ன் கீழ் தமிழ்நாடு அரசு தோற்றுவித்துள்ளது.

இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பொருட்டு, 20-7-93 ஆம் நாளிட்ட அரசு தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத்துறை, நிலை ஆணை எண் 123-இல் நிதியமைச்சர் தலைமையில் அரசு உயர்நிலைக் குழுவினைப் புதுப்பித்து அமைத்தது.

1. நாவலர் இரா. நெடுஞ்செழியன்
மாண்புமிகு நிதியமைச்சர். - தலைவர்

2. பேராசிரியர் க. பொன்னுசாமி,
மாண்புமிகு கல்வி அமைச்சர் - உறுப்பினர்

3. திரு. கா. ப. பட்டாபிராமன், மாண்புமிகு
கூட்டுறவுத் துறை அமைச்சர் - உறுப்பினர்

4. திரு. முனுஆதி, தலைவர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் - உறுப்பினர்

5. தமிழ் வளர்ச்சி இயக்குநர் - தேர்வுக்குழுவிற்கு
உறுப்பினர் - செயலாளர்.

இக்குழு 25-8-93 அன்று கூடியது. அக்குழுக்கூட்டத்தில் ஆய்வுக்கு வைக்கப் பெற்ற மொத்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 2906 ஆகும்.

குழுவின் அறிவுரைக்கிணங்க, விண்ணப்பங்களுக்குரிய பட்டியல்கள் உரியவாறு தயார் செய்யப் பெற்று, மீண்டும் 28-9-93 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஆய்வுக்கு வைக்கப்பெற்றன. அதில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த விண்ணப்பங்கள் பற்றிய விவரம் வருமாறு :-

அ.	மொழிக் காப்பு தொடர்பானவை :	9
ஆ.	எல்லைக்காப்பு தொடர்பானவை :	300
	மொத்தம்	**309**

அரசின் நிதிநிலைக்குட்பட்டும், தகுதி அடிப்படையிலும் 28-9-93 அன்று கூடிய உயர்நிலைக் குழு மொத்தம் 357 பேர்களைத் தெரிவு செய்து பரிந்துரைத்தன. இதில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் பற்றிய விவரம் வருமாறு :-

அ.	மொழிக்காப்பு -	3
ஆ.	எல்லைக்காப்பு -	13
	மொத்தம்	**16**

உயர்நிலைக் குழுவின் பரிந்துரையை ஏற்று அரசு 10-12-93 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை நிலை ஆணை எண் 221—இன் வாயிலாக 357 பேர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி ஒப்பளிப்பு செய்துள்ளது. ஆக இதுவரை கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த 245

பேர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்துள்ளனர்.

விவரம் வருமாறு :

விவரம்

தொடர் எண்.	ஒப்பளிப்புக்குரிய ஆணையின் எண்ணும் நாளும்	நிதியுதவி பெற்றோர் எல்லைக்காப்பு	மொழிநலம்.
1.	2.	3.	4.
1.	3-3-88 ஆம் நாளிட்ட அரசு தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை நிலை ஆணை எண் 72	141	- -
2.	15-12-89 ஆம் நாளிட்ட அரசு தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறை நிலை ஆணை எண் 412.	64	13
3.	23-7-90 ஆம் நாளிட்ட அரசு தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை நிலை ஆணை எண் 155.	5	6
4.	10-12-93 ஆம் நாளிட்ட அரசு தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை நிலை ஆணை எண் 221.	13	3
	மொத்தம் - 245	**223**	**22**

28-9-93 ஆம் நாளிட்ட நிதியமைச்சரின் தலைமையில் நடைபெற்ற உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்ற மொத்தம் 2906 விண்ணப்பங்கள் தகுதி அடிப்படையில் தெரிவு செய்யப் பெற்றவை 357 மட்டுமேயாகும். 2549 விண்ணப்பங்கள் குழுவால் ஏற்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அரசால் பிறப்பிக்கப்படும் ஆணைகளின் அடிப்படையில் மொழிக்காவலர்களுக்கு நிதியுதவி வழங்கும் திட்டம் அரசின் நிதிநிலைக்கேற்ப, படிப்படியாக (in a phased manner) நிறைவேற்றப்பட்டு வரும் ஒரு தொடர் திட்டமாகும். மொழிநலனின் பொருட்டும், எல்லைக்காப்பது குறித்தும் அருந்தொண்டாற்றியவர்களை இந்த அரசு நன்றியுடன் போற்றுவதனைக் கடமையாகக் கொண்டுள்ளது. ஆனால் இத்திட்டத்தின்கீழ் மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைவருக்கும் ஒரே நேரத்தில் நிதியுதவி அளிப்பது என்பது நடைமுறையில் இயலாததாகும். 28-9-93 அன்று கூடிய உயர் நிலைக்குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப் பெற்ற முடிவின்படி குழுவால் தெரிவு செய்யப் பெறாத பிற விண்ணப்பங்களைப் பொறுத்த வரையில் அனைத்து நடவடிக்கைகளும் முடிவடைந்தனவாகும். அவை தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகின்றன எனக் கருதப்படமாட்டா.

அடுத்து, அரசு, விண்ணப்பங்கள் வேண்டப்பெறுவதனையடுத்து, இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி பெற விரும்பி விண்ணப்பிப்பவர்களுடைய விண்ணப்பங்கள் தகுதி அடிப்படையில் உயர்நிலைக்குழுவால் பரிவுடன் கருதப்பெற்றுக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் நிதியுதவி வழங்க அரசாணை பிறப்பிக்கப்படும்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே நீங்கள் 2549 விண்ணப்பங்கள் வந்ததாகவும் 357 பேர்களுக்குத் தான் கொடுக்கப்பட்டு உள்ளதாக குறிப்பு உள்ளது. மனு கொடுத்திருந்தவர்களில் பாதிப்பேர் இறந்து விட்டார்கள். இந்த 2906 அப்ளிகேஷன் கொடுத்தவர்களும் உண்மையிலேயே யதார்த்தமாக ஜெயிலுக்குச் சென்றவர்கள், போராடியவர்கள். குறிப்பாகச் சொன்னால் எங்கள் மாவட்டம் உருவாக்கிய மார்ஷல் நேசமணி அவர்களே அன்றைக்கு வாதாடியது குறித்த ஒரு பத்திரிகையை வைத்திருக்கிறேன். திருக்கொச்சி 11-10-1954 தினமலர் பத்திரிகையில் 47 எதிரிகளில் ஜாமீன் மனுக்கள் கொடுத்து விசாரணை குறித்து செஷன்ஸ் கோர்ட்டில் நேசமணி விவாதம் என்று சொல்லக்கூடிய அந்த ரெக்கார்டு இங்கே இருக்கிறது. 347 ஆக்கியூஸ்டுகள் என்று சொல்லியிருந்தபோதிலும் கூட, அதிலே கூட பி. சிதம்பரம், பரக்குன்று, செல்வமணி, மகிழ்ந்தாம் விளை, தங்கநாடார் பொன்னேரி நாடார் போன்ற 47 பேர்களுக்கு, அன்றைக்கு ஜாமீன் மறுத்தவர்களுக்கு இன்னும் உதவி கொடுக்கப்படவில்லை. இதிலே நீங்கள் கொடுத்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருப்பது மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே தயவு செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பரிந்துரை செய்யப் பட்ட - 1975-ல் ஒரு ஆணை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் போட்டப்பட்டிருக்கிறது. 3 எம்.எல்.ஏ.-க்கள் பரிந்துரை செய்திருந்தால் அவர்களுக்கு கொடுக்கலாம் என்று 1975 இல் ஆணை இருக்கிறது. அந்தப் பரிந்துரை பேரிலே எம்.எல்.ஏ.-க்களால் பரிந்துரை கொடுத்த மனுக்கள்தான் இங்கே கூறப்பட்டிருக்கிற 2906 அப்ளிகேஷன்கள். அதில் நீங்கள் கொஞ்சமாக கொடுத்துக் கொண்டிருந்தால் நிச்சயமாக சரியாக இருக்காது. அன்றைக்கு அக்கியூஸ்டாக கோர்ட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களுக்கு கூட நீங்கள் கொடுக்கவில்லை என்று சொன்னால், அதிலே என்ன நியாயம் என்று சொல்ல முடியாது. தயவு செய்து அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பரிந்துரை செய்யப்பட்ட அனைவருக்கும் கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழிக் காவலர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம் அரசின் நிதிநிலைமைக்கு ஏற்ப படிப்படியாக in a phased manner, நிறைவேற்றப்பட்டு வரும் ஒரு தொடர் திட்டம். மொழி நலனில் போராட்டம் எல்லை காப்பது குறித்தும் அரும் தொண்டாற்றியவர்களை இந்த அரசு நன்றியுடன் போற்றுவதை கடமையாகக் கொண்டிருக்கிறது.

ஆனால் இத்திட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள அனைவருக்கும் ஒரே நேரத்திலே நிதி உதவி அளிப்பது என்பது நடைமுறையில் இயலாதது ஆகும். 28-9-1993 அன்று கூடிய உயர்நிலை குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி, அக்குழுவால் தெரிவு செய்யப்படாத விண்ணப்பங்களைப் பொறுத்த வரையில் அனைத்து நடவடிக்கைகளுமே முடிவு அடைந்தனவாகும். அவை தொடர்ந்து நிலுவையில் இருந்து வருகின்றன என்று கருதப்பட மாட்டா. அடுத்து அரசு விண்ணப்பங்கள் வேண்டி பெறுவதையடுத்து இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற விரும்பி விண்ணப்பிப்பவர்களுடைய விண்ணப்பங்கள் தகுதி அடிப்படையில் உயர்நிலைக் குழுவால் பரிவுடன் கருதப்பெற்று குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நிதி உதவி வழங்க அரசு ஆணை பிறப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொடுக்க முடியாது என்று சொன்னால் மனுக்களை எந்த வகையில் கொடுக்க முடியும். இதிலே அவர்கள் பல கேஸ்களிலே மாட்டப்பட்டு இருக்கிறார்கள். அந்த கேஸ்களுடைய நம்பர்களும் கொடுத்திருக்கிறேன். ஆர்டர்களும் இங்கு இருக்கிறது. பத்திரிகையினுடைய 1954-லே தினமலரிலே வந்த செய்தியையும் கொடுத்திருக்கிறேன்.

பிற்பகல் 12.10

இனியும் அவர்களுக்கு கொடுக்க மாட்டேன் என்று சொன்னால் என்ன செய்ய முடியும். அவர்களுக்கு எல்லாம் 70.80 வயது ஆகிறது. கொடுத்து இருக்கின்றவர்களில் பல பேர் இறந்துபோய் விட்டார்கள். இறந்தவர்களின் குடும்பத்திற்கும் அந்த பென்ஷன் கொடுக்கப்படவில்லை. ஆகையால் தயவு செய்து இருக்கின்ற மனுக்களை திரும்பவும் மறுபரிசீலனை செய்ய முடியுமா? இல்லையென்றால், இனி எப்படி அவர்களுக்கு கொடுக்க முடியும்? எல்லோருமே 80 வயதைத் தாண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஏதோ ஒன்று, இரண்டு வருடங்கள்தான் அந்த பென்ஷன் கிடைக்கும். தயவுசெய்து இருக்கின்ற மனுக்களை திரும்பவும் உயர்மட்டக் குழு மறுபரிசீலனை செய்யுமா? உடனடியாக அந்த வயதானவர்களுக்கு பென்ஷன் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை 245 பேர்கள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் அடைந்திருக்கிறார்கள். 3-3-1988 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அரசு நிலை ஆணை எண் 72-ன்படி எல்லைக் காப்பு நிதியுதவி பெறுவோர் 141 பேர்கள். 15-12-1989 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அரசு நிலை ஆணை எண் 412-ன் கீழ் 64 பேர்கள்.

23-7-1990 ஆம் நாளிட்ட தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அரசு நிலை ஆணை எண் 155-ன் கீழ் 5 பேர்கள், 1993 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அரசு நிலை ஆணை எண் 221-ன் கீழ் 13 பேர்கள். ஆக 223 பேர்களும், மொழி நலம் தொடர்பாக 22 பேர்களும் ஆக 245 பேர்கள் இத் திட்டத்தின்கீழ் அந்த மாவட்டத்திலே பயன் அடைந்திருக்கிறார்கள். நிதிநிலை அடிப்படையிலேதான் அரசு இதைச் செய்ய முடியும். நிதிநிலைக்கேற்ப விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அறிக்கைகள் அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. என். ஆர். ராஜேந்திரன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பாக அளிப்பார்.

* **திரு. என். ஆர். ராஜேந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 40 மற்றும் 41-வது அறிக்கைகளை குழுத் தலைவரின் சார்பாக பேரவைக்கு அளிக்கின்றேன்.

8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1985–86, அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1985-86 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1985-86 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் முடிவாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்திற்குமேல் சில இனங்களில் மிகையாகச் செலவிடப்பட்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது. அந்த ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை இம் மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. பொதுக்கணக்குக் குழு, 1985-86 ஆம் ஆண்டு நிதியொதுக்கக் கணக்குகளை ஆய்வு செய்ததில் சில மானியங்களின்கீழ் அனுமதிக்கப்பட்ட தொகைக்குமேல் செலவு செய்யப்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. இந்த மிகைச் செலவிற்கான காரணங்களை ஆராய்ந்த பிறகு 1985-86 ஆம்